# சுற்றுச்சூழல் – வனத்துறை

## செயலாக்க வரவு செலவுத் திட்டம்

## 2019-2020

## சுற்றுச்சூழல் துறை

©
தமிழ்நாடு அரசு
2019

## செயலாக்க வரவு செலவுத் திட்டம் 2019–2020

## சுற்றுச்சூழல் துறை

மாநிலத்தின் சுற்றுச்சூழல் மேலாண்மைப் பணிகளுக்கென 13.10.95 ம் நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசு ஆணை (நிலை) எண்.335 ன்படி, சுற்றுச்சூழல் துறை உருவாக்கப்பட்டது. இத்துறை, மார்ச் 1996 முதல் சென்னையில், ஒரு இயக்குநரகத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

**நோக்கங்கள்**

1) மாநிலத்தின் ஆறுகள் மாசடைவதைத் தடுக்கும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் போன்ற திட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்தல்,

2) மைய அரசினால் 1991 / 2011–ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட கடற்கரையோரப் பகுதிகள் கட்டுப்பாடு அறிவிக்கையின் விதிமுறைகளை மாநில கடற்கரையோர பகுதிகள் மேலாண்மை குழுமத்தின் மூலம் இம்மாநிலத்தில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்

3) மாநிலத்தில் பல்வேறு சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளை திட்டமிட்டு செயலாக்குதல்

4) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற அனைத்து சுற்றுச்சூழல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.

மேற்கண்ட திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு கீழ்க்காணும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1. தேசிய பருவநிலை மாற்ற தழுவல் நிதி**

அ. தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த செயல் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு, தொடர்பு துறையாக உள்ள சுற்றுச்சூழல்துறை, சமர்ப்பித்த ‘‘தமிழ்நாடு மன்னார் வளைகுடாவின் நீடித்த மற்றும் பருவநிலை மாற்றத்திற்கேற்புடையதான கடலோர வாழ்விடங்கள் மற்றும் பல்லுயிரினங்கள் மேலாண்மை மற்றும் மறுவாழ்வு’’ என்ற திட்டப் பிரேரணைக்கு அனுமதி வழங்கிய மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சகம், தேசிய பருவநிலை மாற்ற தழுவல் நிதியின் கீழ் ரூ.24.74 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஆ. மேற்கண்ட திட்டமானது, மன்னார் வளைகுடா பகுதியில் உள்ள கடலோர சூழல் அமைப்பு (உயிர்ப்பன்மயம் மற்றும் மீன்வளம்) மற்றும் வாழும் கடலோர மக்களுக்கு பருவநிலை மாற்றத்தினால்

(பவளப் பாறை கடற்புல் புனரமைப்பு) ஏற்படக்கூடிய விளைவுகள் ஆகிய இரண்டுக்குரிய அடிப்படை தகவல்களை ஆய்வுசெய்து சேகரித்தல், பருவகால மாற்றத்தினை ஏற்கத்தக்க செயல்பாடாக கரியச்சல்லி மற்றும் விலங்குச்சல்லி தீவுகளின் பவளப்பாறை மற்றும் கடற்பாசி ஆகியவற்றின் வாழுமிடங்களை மீளச்செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இத்திட்டம் முடியும் நிலையில் உள்ளது.

இ. தமிழ்நாடு நீர்பாசன அபிவிருத்தி நிறுவனம் சமர்பித்த ‘‘தமிழகத்தில் உள்ள சேலம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப நீர்நிலைகளை தயார்படுத்துதல்’’ திட்டத்திற்கு மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை குறித்த அமைச்சகம் அனுமதி வழங்கி இத்திட்டம் செயல்படுத்த ரூ 23.80 கோடியினை தமிழ்நாடு நீர்பாசனம் அபிவிருத்தி நிறுவனத்திற்கு அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

**2. பருவநிலை மாற்றத்திற்கான பசுமை நிதி**

அ) இந்த நிதி வளரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தின் தாக்கத்தினை தழுவுதல் மற்றும் மட்டுப்படுத்துதல் நடைமுறைகளை உருவாக்கம் செய்தல், குறைக்கும் யுக்திகளை கையாளுதல் ஆகியவற்றுக்கு உதவிட ஏதுவாக பருவ நிலை மாற்றத்திற்குரிய ஐக்கிய நாடுகள் வகுத்த கட்டமைப்பு நெறிமுறையின் அடிப்படையில் பெறப்படுகிறது.

ஆ) தமிழ்நாடு பருவநிலை மாற்றம் குறித்த அமலாக்க முகமையாகச் செயல்படும் சுற்றுச்சூழல் துறை தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி ஆலோசனைகளுடன் சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து பசுமை பருவநிலை மாற்றத்திற்கான பசுமை நிதியின் கீழ், கருத்துருக்களை சமர்ப்பிக்க ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

இ) ஏற்கும் திறன் மற்றும் எதிர் கொள்ளல் என்ற இரண்டு விருப்பங்களை நிறைவேற்றும் வகையிலான பல்வேறு திட்டங்கள், பருவநிலை மாற்றத்திற்கான பசுமை நிதியிலிருந்து நிதி பெற ஏதுவாக, மைய அரசின், பரிசீலனையில் உள்ளன. தமிழ்நாடு மன்னார் வளைகுடாப்பகுதி அப்பா மற்றும் கோஸவரி தீவுகளின் பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கு ரூபாய் 98.00 கோடிக்கான சுற்றுச்சூழல் துறையின் திட்டங்களுக்கு ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. நகர்ப்புற சதுப்பு நிலபுனரமைப்பு மேம்படும் வகையில், தமிழ்நாடு வனத்துறை ரூ.147.00 கோடி மதிப்பீட்டில், சதுப்பு நிலங்களின் சூழல் மீட்பு பணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்காக விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

**3. ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம் (இரண்டாம் கட்டம்) .**

அ) நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு, கடலோர மற்றும் கடல் சார்ந்த வளங்களை ஏற்கக் கூடிய அளவில் மேலாண்மை செய்தல் முக்கியமானதாகும். இயற்கை வளம் மற்றும் சிறந்த சுற்றுச்சூழலை நமது எதிர்காலச் சந்ததியினர் உகந்த முறையில் பெறுவதற்கும், மக்களின் சமூக, பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், தமிழக கடற்கரையோர மக்களின் முன்னேற்றத்தினை கவனத்தில் கொண்டும் ஒருங்கிணைந்த கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டம், செயலாக்க முகமைகளின் சிறந்த ஒருங்கிணைப்புடன் நிறைவேற்றும் வண்ணம், தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆ) ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் அடிப்படையில், கடல் வளத்தை நிலைத்த பயன்பாட்டிற்கு மேலாண்மை செய்யவும், இயற்கை வளத்தைப் பராமரிக்கவும், பல்வேறு அரசுத்துறை /முகமைகளின் ஒருங்கிணைந்த அணுகு முறையோடு தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டத்தினை நிலை 2ன் கீழ் செயல்படுத்த, மாநில அரசு மூலம், மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்திற்கு திட்ட மூலக்கருத்துரு அறிக்கை, ஆதார அறிக்கை மற்றும் ஆரம்ப திட்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இ) தமிழக கடலோர பகுதிகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் படி ரூ 306.20 கோடி மதிப்பீட்டில், திருத்திய பிரேரணைகள் மைய அரசிற்கு ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்டம் நிலை 2ன் கீழ் சமர்பிக்கப்பபட்டுள்ளது.

ஈ) ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மை திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்படவுள்ள திட்டங்களை செயல்படுத்த ஒரு திட்ட இயக்குநர், ஒரு கூடுதல் திட்ட இயக்குநர் மற்றும் ஒரு திட்ட அலுவலரை கொண்டு மாநில திட்ட மேலாண்மை பிரிவு சுற்றுச்சூழல் துறையில் அமைக்கப்படுள்ளது. இம் மாநில திட்ட மேலாண்மை பிரிவு, திட்ட ஒருங்கிணைப்பு குழுவுடன், அன்றாட நடவடிக்கைகளினை ஒருங்கிணைத்தல் மற்றும் ஒருங்கிணைந்த கடற்கரைப்பகுதி மேலாண்மைத் திட்ட நடவடிக்கைகளைச் செயல்படுத்தும் செயலகமாகச் செயல்படும்.

**4. கடலோர மண்டல மேலாண்மை திட்டம் தயாரித்தல்**

அ) தமிழகத்தில் உள்ள கடலோர மாவட்டங்களான கடலோர மண்டல மேலாண்மை திட்டம், கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2011 ன் வழிமுறைகளின்படி, தயாரிக்கும் பணியை

மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான சென்னையில் உள்ள தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையத்திற்கு தமிழக சுற்றுச்சூழல் துறை வழங்கியுள்ளது.

ஆ. தேசிய கடலோர மண்டல மேலாண்மை குழுமத்தின் பரிந்துரைகளின்படி, மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த அமைச்சகம் தமிழகத்திற்கான கடலோர மண்டல மேலாண்மை திட்டத்திற்கு 24/10/2018 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது. 117 வரைபடங்களை உள்ளடக்கிய அங்கிகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டம் சுற்றுச்சூழல் துறை (www.environment) மற்றும் சுற்றுச்சூழல் தகவல் மையம் (ENVIS)(www.envis.nic.in) இணையதளத்தில் 29/11/2018 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட கடலோர மண்டல மேலாண்மை திட்டத்தின் மென்பொருள் அனைத்து 13 மாவட்ட கடலோர மண்டல மேலாண்மை குழுமங்களுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினருக்கும் தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இ) மைய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த அமைச்சகம் கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிக்கை 2019ஐ 18/01/2019 அன்று வெளியிட்டது. எனவே, கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019ன் வழிமுறைகளின்படி, தேசிய கடலோர நிலைத்திட்ட மேலாண்மை மையம் மூலம், கடலோர மண்டல மேலாண்மை திட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருத்தப்பட்ட கடலோர ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை 2019 ன்படி, கடலோர மண்டல மேலாண்மை வரைபடங்கள் மைய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்த அமைச்சகத்திற்கு, தமிழக அரசு மூலம் சமர்ப்பிக்கும் முன்பு, இத்திட்டம் குறித்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டங்கள் ஆலோசனைகள் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 5. இதர நடவடிக்கைகள்

### அ) சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறப்பாக செயல்படும் அரசு சாரா நிறுவனங்கள், வல்லுநர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோரது முயற்சி மற்றும் பங்களிப்பினைச் சிறப்பிக்கும் வகையில் சுற்றுச்சூழல் விருதுகள் மாநில அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. 2000–மாவது ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இவ்விருதுகள் ஆண்டுதோறும் உலக சுற்றுச்சூழல் தினமான ஜுன் 5–ஆம் நாளன்று வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் 10 விருதுகள் ரூ.1.13 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டுக்குரிய விருதுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

**ஆ. தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களைக் கொண்டு பள்ளிகளில் மரக்கன்று நடும் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், பள்ளி வளாகங்களை தூய்மையானதாகவும் பசுமையானதாகவும் பராமரிக்கவும், சுற்றுச்சூழல் சார்ந்த நடவடிக்கைகளில் மாணாக்கர்களின் பங்களிப்பினை பயனுள்ளதாக்கவும், தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 30 பள்ளிகள் வீதம், தேர்ந்தெடுக்கப்பட்ட 960 சூழல் மன்றம் மற்றும் தேசிய பசுமைப்படை அமைந்துள்ள பள்ளி வளாகங்களில், மரக்கன்றுகள் நட்டு பராமரிக்க, 2017-18 ஆம் ஆண்டில் ரூபாய் 144.00 இலட்சம் அரசு ஒப்புதல் வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை பள்ளி ஒன்றுக்கு ரூபாய் 5000/- விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கு ஊக்கத்தொகையும் சான்றிதழ்களும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருசிறது. இத்திட்டத்தினை 2018–19 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மேலும் 960 பள்ளிகளில் செயல்படுத்தும் வண்ணம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளைத் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகளுக்கான நிதி விரைவில் விடுவிக்கப்படும்

**இ) சூழல் போட்டிகள் நடத்துதல் மற்றும் சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லுதல்**

மாணாக்கர்களுக்கு சூழல் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கென, எட்டாம் வகுப்பிற்குக் கீழ், அதற்கு மேல் என இரண்டு பிரிவாக, பேச்சுப்போட்டி, வினாடி–வினா மற்றும் ஓவியப்போட்டி ஆகிய மூன்று இனங்களில் சுற்றுச்சூழல் போட்டிகள் வருவாய் மாவட்ட அளவில் நடத்தப்பட்டன. பரிசுகள் மற்றும் சான்றிதழ்களுடன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மற்றும் மாணவியர் தனித்தனியாக சூழல் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். இதற்கென மாவட்டத்திற்கு ரூபாய் 1.00 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களிலும் செயல்படுத்த ரூபாய் 32.00 இலட்சம் 2018-19 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, இத்திட்டம் 2019–20 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**ஈ. கடற்கரைப் பகுதி சூழல் அமைப்பு தொடர்பாக விளம்பரப் பலகை அமைத்தல்**

கடற்கரைப் பகுதி சூழல் அமைப்பு , இயற்கை நிலை கடற்கரை மண்டலத்தின் பாதுகாப்பு தொடர்பான செய்திகளை உணர்த்தும் வகையிலும் கடற்கரை மண்டலத்தில் செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை ஆகியவற்றை தெரிவிக்கும் வகையில் விளம்பரப்பலகை அமைக்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த அரசு சாரா அமைப்புகள், நிறுவனங்கள்

மற்றும் ஒருங்கிணைப்பாளர்களிடமிருந்து விருப்ப விண்ணப்பங்கள் டிசம்பர் மாதம் 2018 ல் பெறப்பட்டன. இந்த விண்ணப்பங்கள் இதற்கென அமைக்கப்பட்ட குழு மூலம் ஆய்வு செய்யப்பட்டு, குழு பரிந்துரையின் அடிப்படையில் அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.1.00 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டம் 2019 ல் முடிவு பெறும்.

**உ) கடற்கரைப் பகுதி வாழ்விடங்களில் நாடகம் பரப்புரை மற்றும் தெரு நாடகங்கள் நடத்துதல்**

சுற்றுச்சூழலுக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய திடக்கழிவு மற்றும் டயர் ஆகியவற்றை எரித்தல், மீன் கழிவுகளை நீர்நிலைகளில் குவித்தல், சிற்றோடைகள், ஆற்றின் முகத்துவாரங்களில் குவித்தல், அங்கீகரிக்கப்படாத கட்டடங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகள் கடற்கரைப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. எனவே மேற்கண்ட செயல்பாடுகளால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்த விழிப்புணர்வு அரசு சாரா அமைப்புகள் / தேசியப் பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் மூலம் தெரு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மூலம் 13 கடற்கரை மாவட்டங்களில் ரூ.32.50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன.

**ஊ) வாகனங்கள்மூலமாக பிளாஸ்டிக் பயன்பாட்டின் தீமை குறித்து விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளுதல்**

பிளாஸ்டிக்பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு கடும் தீங்கினை விளைவிப்பதால் பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் அடிக்கடி கற்பித்தல் அவசியமாகிறது. எனவே அரசுசாரா அமைப்புகள் /தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலம் நாட்டுப்புறப்பாடல்கள், நாடகங்கள்,தெருநாடகங்கள் வில்லுப்பாட்டு, பாரம்பரியமிக்க நடன நிகழ்ச்சிகள் மூலம் வாகனங்கள் மூலமாக 2013-14 முதல் 2016-17 வரை செயல்படுத்தப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கை பொது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.

எனவே, பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகளை பொதுமக்களிடம் எடுத்துக்கூறி பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டைக் குறைக்கும் விதமாக மாவட்டம்தோறும் அரசுசாரா அமைப்புகள்/தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் மூலமாக, பிளாஸ்டிக் பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதுவாக கலைக்குழு மூலம் வாகனவழிப் பிரச்சாரம் மாவட்டம்தோறும் 20 இடங்களில் , மாவட்டத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.64.00 இலட்சம் விடுவிக்கப்பட்டு 2018-19 ஆம் ஆண்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதி, இத்திட்டத்தினை 2019–20 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தலாம்.

**எ. சிறந்த குறும்படங்களுக்கான சுற்றுச்சூழல் விருதுகள்**

விளம்பரப்படுத்த ஏதூவாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து தயாரிக்கப்படும் சிறந்த மூன்று படங்களுக்கு சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. சிறந்த மூன்று விளம்பரப் படங்களுக்கு பரிசாக ரூ.7 இலட்சம், 6 இலட்சம் மற்றும் ரூ5 இலட்சம் என சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்படும். தயாரிப்பாளர்கள்/முகவர்களிடமிருந்து விளம்பரப்படங்கள் பெறுவதற்கு பெரிய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டது. 146 விளம்பரப்படங்கள் பெறப்பட்டுள்ளன. விருதுக்குரிய விளம்பரப்படங்களை தேர்வு செய்ய அரசு ஒரு தேர்வுக் குழுவை அமைத்துள்ளது. குழுவிடமிருந்து அறிக்கை பெறப்பட்ட பின்னர் விருதுக்குரியவர்கள் இறுதி செய்யப்படுவார்கள். 2019-20 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் பெரிய அளவில் இந்தக் குறும்படங்கள் விளம்பரப்படுததப்படும்,

**ஏ.இணைய வழிக் கற்றல்.**

பசுமைத் தினங்கள் கொண்டாட்டங்களின் போது சுற்றுச்சூழல் துறையிள்ள வல்லுநர்களோடு மாணாக்கர்கள் இணையதள வழியாக நேரடியாக தொடர்பு கொள்ள ஏதுவாக இணையவழி கற்றல் என்ற இத்திட்டத்தின்படி ஏற்கனவே பள்ளிகளில் செயல்பட்டு வரும் 57 சுற்றுச்சூழல் தகவல் மையங்கள் 2016-17 ஆம் ஆண்டில் ரூ.14.44 இலட்சங்கள் செலவில், இத்துறையின் வலைதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் 12 தகவல் மையங்களை இத்துறையின் வலைதளத்துடன் இணைக்க அரசு உத்தரவிட்டுள்ளது அதன் மீதான நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

**நீர் நிலைகளில் சூழல் மீட்புப் பணிகள்**

அ.) திருவள்ளூர் மாவட்டம், ஆவடியில் உள்ள பருத்திப்பட்டு ஏரியின் சூழல் மீட்டளிப்பு செய்யும் பணிகள் பொதுப்பணி துறையின் மூலம் ரூ. 28.16 கோடி செலவில் முடியும் தருவாயில் உள்ளன.

ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தாலுகாவின் வடமுகம் வெள்ளோடு கிராமம் பெரியகுளம் ஏரியின் சூழல் மீட்டளிப்பு பணிகள் ரூ.4.90 கோடி மதிப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஈரோடு மாவட்டம் ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட முத்தம்பாளையம் ஏரி மற்றும் எல்லப்பாளைம் ஏரியின் சூழல் மீட்டளிப்புப் பணிகள் ஈரோடு மாவட்ட நிருவாக அமைப்பின் மூலம் ரூ.13.75 கோடி செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**நிர்வாக அமைப்பு**

இத்துறையானது மாநிலத்தில் சுற்றுச்சூழல் சம்பந்தமான பல முக்கிய பணிகளான திட்ட செயல்பாடுகள், திட்ட ஒருங்கிணைப்பு, கண்காணிப்புக் கொள்கை முடிவுகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக கீழ்க்கண்ட ஏழு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. நிலவள பயன்பாட்டு கோட்டம்

2. திடக் கழிவு மேலாண்மை கோட்டம்

3. நீர் ஆதார கோட்டம்

4. கடற்கரையோரப் பகுதிகள் சுற்றுச்சூழல் மேலாண்மை கோட்டம்

5. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு கோட்டம்

6. சுற்றுச்சூழல் தணிக்கை

7. சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு

இத்துறைக்கென கீழ்க்கண்டவாறு பல்வேறு பணியிடங்களுக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது:-

1. அ.ஆ. (நிலை) எண்.335, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (டிசி)துறை, நாள் 13.10.1995

2. அ.ஆ. (நிலை) எண்.153, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சூ.பா.2) துறை, நாள் 07.05.1997

3. அ.ஆ. (நிலை) எண்.246, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சூ.பா.1) துறை, நாள் 3.7.1997

4. அ.ஆ, (நிலை) எண்.39, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (சூ.பா.2) துறை, நாள் 29.3.2005

| | |
|---|---|
| 1) இயக்குநர் | 1 |
| 2) கூடுதல் இயக்குநர் | 1 |
| 3) துணை இயக்குநர் | 3 |
| 4) உதவி வனப்பாதுகாவலர் | 1 |
| 5) உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் | 1 |
| 6) கணக்கு அலுவலர் | 1 |

| | |
|---|---|
| 7) சமூகவியலாளர் | 1 |
| 8) வனச்சரகர் | 1 |
| 9) கண்காணிப்பாளர் | 1 |
| 10) உதவியாளர் | 4 |
| 11) உதவி பொறியாளர் | 2 |
| 12) இளநிலை வரைதொழில் அலுவலர் | 1 |
| 13) சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 14) தட்டச்சர் | 1 |
| 15) இளநிலை உதவியாளர் | 1 |
| 16) உதவி நிரலர் | 1 |
| 17) பதிவறை எழுத்தர் | 1 |
| 18) ஓட்டுநர் | 3 |
| 19) அலுவலக உதவியாளர் | 8 |
| மொத்தம் : | 34 |

இவ்வியக்ககம் இந்திய வனப்பணியின் கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் நிலையில் இயக்குநர் ஒருவரால், நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இயக்குநருக்கு உதவியாக, தலைமை வனப்பாதுகாவலர் நிலையில் ஒரு கூடுதல் இயக்குநர், துணை இயக்குநர், உதவி சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் ஆகியோரும் உள்ளனர்.

1991/2011–ல் அறிவிக்கப்பட்ட கடலோரப் பகுதி கட்டுப்பாட்டு அறிவிக்கைகளின் வரன் முறைகளுக்கு புறம்பாக நடைபெறும் நிகழ்வுகளைக் கண்காணித்திட உதவி வனப்பாதுகாவலர் தலைமையில் ஒரு பசுமைப்படை நிறுவப்பட்டுள்ளது.

(உ) 2018–19ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் சுற்றுச்சூழல் துறையினால் செயல்படுத்தப்பட்டன.

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர் | திருத்திய மதிப்பீடு 2018–19 | செலவு 2018–19 | வரவு செலவு மதிப்பீடு 2019–20 | 2019–20 திருத்திய மதிப்பீட்டில் கோரப்படவுள்ள தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | சுற்றுச்சூழல் விருதுகள் | 1.13 | 1.13 | 1.13 | 00.00 |
| 2 | பள்ளிக் குழந்தைகளுக்கான இணையவழி சுற்றுச்சூழல் விழிப்புணர்வு | 14.16 | 14.16 | 00.00 | 00.00 |
| 3 | சூழல் போட்டிகள் மற்றும் சூழல் சுற்றுலா | 32.00 | 32.00 | 00.00 | 32.00 |
| 4 | வாகனவழிப் பிரச்சாரம் விளம்பரம் மற்றும் பிரச்சாரம் | 64.00 | 64.00 | 00.00 | 64.00 |
| 5 | கடற்கரைப் பகுதி சூழல் அமைப்பு மற்றும் கடற்கரைப் பகுதியின் பாதுகாப்புக்காக செய்யத்தக்கவை மற்றும் செய்யத் தாகதவை குறித்து விழிப்புணர்வு உருவாக்கும் வகையில் தகவல் பலகைளை 13 கடலோர மாவட்டங்களில் அமைத்தல் | 100.00 | 100.00 | 00.00 | 00.00 |
| 6 | மீனவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே கடற்கரைப்பகுதியில் திடக்கழிவு மேலாண்மை குறித்து தெரு நாடகங்கள்,பிரச்சாரங்கள் மற்றும் நாடகங்கள் மூலம் 13 கடலோர மாவட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 32.50 | 32.50 | 00.00 | 00.00 |
| 7 | பள்ளி வளாகங்களில் மரக்கன்று நடுதல் | 0.00 | 144.00 | 00.00 | 00.00 |
| 8 | சிறந்த மூன்று விளம்பரப் படங்களுக்கான சுற்றுச்சூழல் விருதுகள் | 20.00 | 20.00 | 00.00 | 30.00 |
| 9 | சூழல் மீட்புப் பணிகள் | 1318.00 | 1318.00 | 00.00 | 00.00 |